# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

**<u>ஆணை நாள் – 03.06.2025</u>**

**<u>முன்னிலை</u>**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண்.NC.643/F/2024 (SA.6998/F/2022)

திரு. V. விஜயரங்கம் — மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
அணைக்கட்டு - 632 101, வேலூர் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 31.01.2022 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 07.03.2022 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 16.04.2022 |
| ஆணையத்தின் Preliminary Notice அனுப்பப்பட்ட நாள் | 23.05.2022 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 16.08.2023 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 17.08.2023 |
| மனுதாரர் NC மனு தாக்கல் செய்த நாள் | 04.10.2024 |

****

## ஆணை

மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டார வளர்ச்சி அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், கடந்த 2021-2022-ஆம் ஆண்டில் அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், ஒங்கப்பாடி ஊராட்சியில் எவ்வளவு நிதி எந்தெந்த திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, அந்த ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் எந்தெந்த பணி செய்யப்பட்டது, ஓங்கப்பாடி ஊராட்சியில் ஓங்கப்பாடி ஊராட்சி மன்ற அலுவலகம் எந்த திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது, ஓங்கப்பாடி ஊராட்சி மன்ற அலுவலகம் அரசாங்கம் கொடுத்த அளவின்படி கட்டப்பட்டது என்பது பற்றிய விவரம், ஒங்கப்பாடி கிராமத்தில் ஊட்டச்சத்து மையம் (குழந்தைகள்) கட்டடம், எந்த ஆண்டு கட்டப்பட்டது, எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டது எந்த ஒப்பந்ததாரர் கட்டினார் என்பது குறித்த முழு விவரங்களை மொத்தம் 17 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

2. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு (SA.6998/F/2022) 17.08.2023 அன்று நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்வாணையத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

***" 3. அன்றைய (17.08.2023) விசாரணையின் முடிவில், மேற்படி மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழான மனுவில் கோரியுள்ள இனங்களான-10, 12, 13 மற்றும் 16 ஆகியவற்றிற்கான தகவல்களை உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற 14 தினங்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவல்களின் நகல்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத்தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்பட்டிருந்தது".***

*4. இந்நிலையில்,* இவ்வாணையத்தால் 17.08.2023 தேதியிட்டு பிறப்பிக்கப்பட்ட ஆணையை பொதுத் தகவல் அலுவலர் முழுமையாக நிறைவேற்றவில்லை என்பதால் மனுதாரர் 04.10.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக இவ்வாணையத்தில் ஆணை நிறைவேற்றப்படாமை மனுவினை தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட ஆணை நிறைவேற்றப்படாமை மனு வழக்கு எண்.NC.643/F/2024 (SA.6998/F/2022)-ஆக இவ்வாணையத்தில் பதிவு செய்யப்பட்டு, 19.02.2025 அன்று காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

5. அன்றைய (19.02.2025) விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், இவ்வாணையத்தின் ஆணைக்குட்பட்டு, மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

6. அன்றைய (19.02.2025) விசாரணையில் ஆஜரான மனுதாரர், இவ்வாணையத்தின் ஆணைக்குட்பட்டு தனக்கு முழுமையான தகவல்கள் நாளதுவரையில் வழங்கப்படவில்லை என்றும், தனது மனுவில் கோரிய தகவல்களை தனக்கு முழுமையாக பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

> ***7. அன்றைய** (19.02.2025) **விசாரணையின் மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள இனங்களான-10, 12, 13 மற்றும் 16 ஆகியவற்றிற்குரிய தகவல்களை மனுதாரருக்கு முழுமையாக 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு 26.05.2025-க்குள் பதிவஞ்சல் வாயிலாக மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை** __**28.05.2025**__ **அன்று பிற்பகல் 2.00 மணியளவில் இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ) / தற்போதைய பொதுத் தகவல் அலுவலரான திரு. கா. சதீஷ் குமார் என்பவருக்கு உத்தரவிடப்படட்டிருந்தது.***

***மேற்படி, இவ்வாணையத்தின் 17.08.2023 தேதியிட்டு பிறப்பிக்கப்பட்ட ஆணைக்குட்பட்டு, மனுதாரருக்கு உரிய தகவல்களை வழங்காத காரணத்தினால் வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ) / அப்போதைய பொதுத் தகவல் அலுவலரான திருமதி V. ஜெயந்தி என்பவரின்மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1)-ன்படி அதிகபட்சமாக ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்)-ஐ தண்டத்தொகையாக ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான எழுத்து பூர்வமான விளக்கத்தினை 28.05.2025 அன்று பிற்பகல் 2.00 மணியளவில் இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ) / அப்போதைய பொதுத் தகவல் அலுவலரான திருமதி V. ஜெயந்தி என்பவருக்கும் உத்தரவிடப்பட்டிருந்தது.***

*8. அதனடிப்படையில் இன்று (28.05.2025) திரு.* கா. சதீஷ்குமார், தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது) / *பொதுத் தகவல் அலுவலர்,* வட்டார வளர்ச்சி அலுவலகம், அணைக்கட்டு, வேலூர் மாவட்டம் இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி, *மனுதாரருக்கு ந.க.அ8/272/2022 நாள் 23.05.2025 தேதியிட்டு, 26.05.2025 அன்று பதிவஞ்சல் வாயிலாக தகவல்களை அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார். மேலும்,* வேலூர் மாவட்டம், அணைக்கட்டு, வட்டார வளர்ச்சி அலுவலகம், தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது) / *அப்போதைய பொதுத் தகவல் அலுவலரான திருமதி வே. ஜெயந்தி (ஊராட்சிகள்) என்பவர்* ஆணையத்தில் நேரில் ஆஜராகி மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்காதது குறித்து எழுத்துப்பூர்வமான விளக்கத்தினை இவ்வாணையத்தில் நேரில் சமர்ப்பித்தார்.

*9. இன்றைய விசாரணையின் முடிவில், கீழ்க்கண்ட உத்தரவு இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகிறது :-*

- ***மேற்படி, மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள இனம்-10-க்குரிய தகவலான ஒங்கப்பாடி கிராமத்தில் ஊட்டச்சத்து மையக் (குழந்தைகள்) கட்டடம் எந்த ஆண்டு கட்டப்பட்டது, எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டது, எந்த ஒப்பந்ததாரர் கட்டினார் என்பது குறித்த தகவல் முழுமையானதாக இல்லை என இவ்வாணையம் கருதுகிறது.***

- ***மேலும், மனுதாரரின் 31.01.2022 தேதியிட்டு விண்ணப்பிக்கப்பட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் மொத்தம் 17 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். மேற்படி, மனுதாரர் 31.01.2022 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவினை விண்ணப்பிக்கும்போது மூன்று பொதுத் தகவல் அலுவலர்கள் [ (1) திரு கா. சதீஷ்குமார் (பொது), (2) திருமதி வே. ஜெயந்தி (ஊராட்சிகள்) (3) திரு சு. ஆறுமுகம் (மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம்)] பணியில் இருந்துள்ளார்கள். அம்மூன்று பொதுத்தகவல் அலுவலர்களும் மனுதாரரின் மனுவில் கோரும் தகவல்களை வழங்கக் கூடியவர்கள். ஆனால்,***

*மனுதாரரின் மனுவில் கோரிய தகவல்கள் குறித்து சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர் தகவல்களை வழங்கிவிட்டு மற்ற இனங்கள் குறித்த தகவல்களை சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர்களுக்கு எழுத்துமூலமாக மாற்றம் செய்திருக்கவேண்டும். அவ்வாறு பொதுத் தகவல் அலுவலர் செய்ய தவறியுள்ளதாக இவ்வாணையம் கருதுகிறது.*

- *மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவிற்கு உரிய காலத்திற்குள் தகவல்கள் வழங்கவில்லை. மேலும், மனுதாரரின், மனுவில் கோரியுள்ள தகவல்கள் எந்தெந்த பொதுத் தகவல் அலுவலர் வழங்கவேண்டும் என்பது குறித்து உதவி இயக்குநர் (திட்டங்கள்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர் மாவட்டம் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர் மாவட்டம் அவர்கள், (1) திரு கா. சதீஷ்குமார் (பொது) / பொதுத் தகவல் அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலகம், அணைக்கட்டு, வேலூர் மாவட்டம், (2) திருமதி வே. ஜெயந்தி (ஊராட்சிகள்) / பொதுத் தகவல் அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலகம் அணைக்கட்டு, வேலூர் மாவட்டம் மற்றும் (3) திரு சு. ஆறுமுகம் (மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம்) / பொதுத் தகவல் அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலகம், அணைக்கட்டு, வேலூர் மாவட்டம் ஆகிய மூன்று பொதுத் தகவல் அலுவலர்களிடம் உரிய விசாரணை மேற்கொண்டு, அது தொடர்பான விசாரணை அறிக்கை மற்றும் உரிய பொதுத் தகவல் அலுவலர்களின் எழுத்துப்பூர்வமான விளக்கங்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்திற்கு நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு மேல்முறையீட்டு அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), அணைக்கட்டு, வேலூர் மாவட்டம் அவர்களுக்கு இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.*

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.NC.643/F/2024 (SA.6998/F/2022)</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
அணைக்கட்டு - 632 101, வேலூர் மாவட்டம்.

<u>வழக்கு எண்.NC.643/F/2024 (SA.6998/F/2022)</u>
<u>பெறுநர்</u>
*திருமதி V. ஜெயந்தி,*
*(அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்)*
*துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை),*
*வேலூர் ஊராட்சி ஒன்றியம்,*
*வேலூர் மாவட்டம்.*

<u>வழக்கு எண்.NC.643/F/2024 (SA.6998/F/2022)</u>
<u>*உரிய விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு :-*</u>
<u>பெறுநர்</u>
*மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி),*
*மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,*
*வேலூர்.*

<u>வழக்கு எண்.NC.643/F/2024 (SA.6998/F/2022)</u>
<u>பெறுநர்</u>
*உதவி இயக்குநர் (திட்டங்கள்),*
*மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,*
*வேலூர்.*

<u>வழக்கு எண்.NC.643/F/2024 (SA.6998/F/2022)</u>
<u>பெறுநர்</u>
*மேல்முறையீட்டு அலுவலர் /*
*வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),*
*ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,*
*அப்புக்கல் ரோடு, அணைக்கட்டு,*
*வேலூர் மாவட்டம் - 632 101.*

<u>வழக்கு எண்.NC.643/F/2024 (SA.6998/F/2022)</u>
<u>பெறுநர்</u>
<u>மனுதாரர்</u>
திரு. V. விஜயரங்கம், த/பெ. வெங்கடேச முதலியார்,
எண்.90, அரசமரத்தெரு,
ஒங்கப்பாடி (கிராமம் & அஞ்சல்),
(வழி) அணைக்கட்டு - 632 101,
வேலூர் மாவட்டம்.

Copy to: File.
SNPS / 05.06.2025